நவம்பர் 2023

10

# செய்திமடல் மகிழ்ச்சி மிகுந்த முதியோர்கள்

## பொலன்னறுவையில் நடமாடும் சுகாதார கிளினிக்



பொலன்னறுவை நடமாடும் சுகாதார கிளினிக்கில் பங்கேற்பாளர்கள் மற்றும் ஊழியர்கள்

## ✔ பின்னணி

சமூகத்தில் வாழும் 60 வயதுக்கு மேற்பட்ட, குறைந்த வருமானம் கொண்ட முதியோர்களுக்கு அவர்களின் உடல் மற்றும் உள ஆரோக்கியத்தை மேம்படுத்தும் நோக்கில் நடமாடும் சுகாதார கிளினிக்குகளை நடத்துவது முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் இலக்காக உள்ளது. இதற்கான நிதியுதவி தேசிய முதியோர் நல நிதியிலிருந்து பெறப்பட்டது. இவ்வருடம் பொலன்னறுவை மாவட்டத்தின் திம்புலாகல பிரதேச செயலகத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது.

2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி திம்புலாகலை பிரதேச செயலகத்தில் தொற்றா நோய்களை இனங்கண்டு, இலவச மருந்துகளை வழங்குதல் மற்றும் கண், காது மற்றும் மூக்கு பரிசோதனைகள் போன்றவற்றிற்காக வைத்தியர்கள் மற்றும் தொழிநுட்ப நிபுணர்களின் பங்களிப்புடன் நடமாடும் சுகாதார வைத்திய நிலையம் ஒன்று நடைபெற்றது. நடமாடும் சுகாதார கிளினிக்கில் கலந்து கொள்ள முடியாத முதியோர்களை அவர்களது வீடுகளுக்கே சென்று வைத்திய பரிசோதனைகளை மேற்கொள்ளும் திட்டமும் அதே நேரத்தில் செயற்படுத்தப்பட்டது.

மேலும், 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான முதியோர் அடையாள அட்டை வழங்கும் நிகழ்வும் முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் உத்தியோகத்தர்களின் தலைமையில் அதே நேரத்தில் நடாத்தப்பட்டது. இந்நிகழ்வில் சுமார் 150 முதியோர்கள் கலந்து கொண்டு தங்களுக்கான முதியோர் அடையாள அட்டைகளை வெற்றிகரமாகவும் மகிழ்ச்சியாகவும் பெற்றுக்கொண்டனர்.

## ✔ நடமாடும் சுகாதார கிளினிக்கின் அமைப்பு

60 வயதுக்கு மேற்பட்ட நோயாளிகளை பதிவு செய்தல்

→ பதிவு செய்யப்பட்ட முதியோர்களுக்கான வைத்திய ஆலோசனை வழங்குதல்.

→ தொற்றா நோய்களுக்கான (NCD) பரிசோதனைகள்

→
- குருதிப் பரிசோதனைகள் (நீரிழிவு, கொலஸ்திரோல்)
- உயர் குருதி அழுத்தம்
- உயரம், எடை, BMI

நடமாடும் கிளினிக்குகள்

- நடமாடும் பல் கிளினிக்
- நடமாடும் கண் கிளினிக்
- நடமாடும் செவிப்புல உதவி கிளினிக்

← நோயாளிகளுக்கு தொற்றா நோய்கள் (NCD) இருப்பது கண்டறியப்பட்டால் அவர்களை பொலன்னறுவை வைத்தியசாலைக்கு பரிந்துரை செய்தல்.

↓ (பதிவு செய்தலிலிருந்து) ஊனமுற்ற / அசைய முடியாத நோயாளிகளை வீடுகளுக்கே சென்று பரிசோதித்தல்.

# செயன்முறை மற்றும் பரிந்துரை அமைப்பு

**வைத்திய ஆலோசனைகள்**: முதியவர்கள் பல்வேறு துறை சார் மருத்துவர்கள் மற்றும் மருத்துவ நிபுணர்களுடன் கலந்தாலோசிக்க வாய்ப்பு கிடைத்தது. இந்த ஆலோசனைகள் முதியோர்கள் தங்கள் உடல்நலம் குறித்த பிரச்சனைகளுக்கான நிபுணர் ஆலோசனையையும், தகுந்த வழிகாட்டுதலையும் பெற உதவியது.

**மருத்துவ பரிசோதனைகள்**: உயர் குருதி அழுத்தம், கொலஸ்திரோல் பரிசோதனை மற்றும் நீரிழிவு மதிப்பீடுகள் உள்ளிட்ட விரிவான மருத்துவ பரிசோதனைகளை சுகாதார வல்லுனர்கள் மேற்கொண்டனர். இந்தப் பரிசோதனைகள் மூலம் அடிப்படை சுகாதார நிலைமைகள் கண்டறியப்பட்டு, உகந்த ஆரோக்கியத்தைப் பேணுவதற்கான ஆலோசனைகள் அனைவருக்கும் தனிப்பட்ட முறையில் வழங்கப்பட்டன.

**பரிந்துரை:** நோயறிதலின் பின்னர், நோயாளிகள் பொலன்னறுவை பொது வைத்தியசாலையில் உள்ள குறித்த கிளினிக்குகளுக்கு பரிந்துரைக்கப்பட்டனர். ஆரோக்கியமான மற்றும் சுறுசுறுப்பான வாழ்க்கை முறையை உறுதி செய்வதற்கான ஊட்டச்சத்து, உடற்பயிற்சி, மனநலம் மற்றும் நோய் தடுப்பு நடவடிக்கைகள் போன்ற பல்வேறு சுகாதார பிரிவுகளைப் பற்றி முதியோர்களை தெளிவூட்டும் வகையில் பிரபல்யமான சுகாதார நிபுணர்களால் சுகாதாரக் கல்வி அமர்வுகள் நடத்தப்பட்டன.



வைத்திய ஆலோசனைக்காக காத்திருக்கும் நோயாளிகள்



வைத்திய ஆலோசனை



தொற்றா நோய்களுக்கான (NCD) பரிசோதனை



கண் நோய்க்கான பரிசோதனை



கிளினிக் புத்தகத்தைப் பயன்படுத்தி நோயாளிகளை வைத்தியசாலைகளுக்கு பரிந்துரைத்தல்



சுகாதார கல்வி அமர்வுகள்



அனைத்து நோயாளிகளுக்கும் இலவச மருந்து வழங்குதல்

# ஒருங்கமைப்பாளர் மற்றும் பங்கேற்பாளர்களின் கருத்துகள்



திம்புலாகலை பிரதேச செயலகப் பிரிவு பொலன்னறுவை மாவட்டத்தில் பொருளாதார ரீதியாக மிகவும் சவாலான பிரிவுகளில் ஒன்றாகும். எனவே, முதியோர்களுக்கான தேசிய செயலகம் நடமாடும் சுகாதார கிளினிக்கிற்கு இப் பிரிவைத் தேர்ந்தெடுத்தது. இப்பிரிவில் வசிக்கும் மக்களின் முக்கிய வாழ்வாதாரம் விவசாயம், இங்கு பெரும்பாலான முதியோர் தங்கள் பிள்ளைகளையே தங்கி வாழ்கின்றனர். அவர்களில் பெரும்பாலானோர், பல்வேறு தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டு மருத்துவ மனைகளுக்குச் செல்கின்றனர். ஆனால், அரசு மருத்துவமனைகளில் மருந்து தட்டுப்பாடு நிலவுவதால், தனியார் கிளினிக்குகளில் மருந்துகளை பெற்றுக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டு, அதற்கான செலவை பிள்ளைகளே ஏற்கின்றனர். முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் நிதியுதவியால் நடமாடும் சுகாதார கிளினிக்கை நடத்துவதற்காக நான் நன்றியுள்ளவளாக இருக்கிறேன். இதன் விளைவாக, மொத்தம் 417 முதியோர்கள் இந்த மருத்துவ சிகிச்சையில் பங்கேற்று, அவர்களின் நோய்களுக்கான மருந்துகளை இலவசமாக பெற்றுக் கொண்டனர்.

**—உஷானி தரங்கா வீரசேன, சமூக சேவை உத்தியோகத்தர், திம்புலாகல —**



நடப்பதில் உள்ள சிரமத்தினால், மருத்துவமனைகளுக்குச் செல்வது எனக்கு சிரமமாக உள்ளது, ஆனால் இன்று எனது மருந்தையும் நோயறிதலையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள முடிந்தது.
-பங்கேற்பாளர்-



இன்று, என் கண் மற்றும் பற்களை பரிசோதனை செய்தேன். எனது பல பிரச்சனைகளுக்கு அவர்கள் எனக்கு சிகிச்சை அளித்தனர். மேலும், இங்கு இலவசமாக மருந்து கிடைப்பது எங்களுக்கு உதவியாக இருக்கின்றது. -பங்கேற்பாளர்-

உங்கள் சமூகத்தில் இடம்பெறும் நல்ல செயல்பாட்டை அனுப்பவும்
jica.procees@gmail.com

இளைஞர்கள், முதியோர் மற்றும் ஊனமுற்றோர் நிறுவகம், சுகாதார அமைச்சு
முதியோர்களுக்கான தேசிய செயலகம் மகளிர்,சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூகவலுப்படுத்துகை அமைச்சு.
ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (JICA)
சமூகத்தில் முதியோர் சேவையின் திறனை மேம்படுத்துவதற்கான திட்டம்

**திட்ட அலுவலகம்**
முதியோர்களுக்கான தேசிய செயலகம் (NSE),
முகவரி: தொகுதி D, 2வது மாடி, செத்சிரிபாய நிலை (II), பத்தரமுல்ல, கொழும்பு
மின்னஞ்சல்: jica.procees@gmail.com